# யாப்பு

## இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி

2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் அல்மஜ்லிஸ் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

# முன்னுரை

**بسم الله الرحمن الرحيم**

*புகழும் புகழ்ச்சியும் ஏகனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தம். அவனது ஸலவாத்தும் ஸலாமும் இறைதூதர் முஹம்மத் அல்முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், இறுதிநாள் வரை அண்ணாரை பின்தொடர்ந்து செல்லும் நல்லடியார்கள் மீதும் உண்டாவதாக!*

*இலங்கை இஸ்லாமிய இயக்கங்களது வரலாறுகளின் ஆரம்பப் பொழுதுகளிலேயே துவக்கப்பட்டதொரு அமைப்பாக இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி இருக்கிறது.*

*அது 1954 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்டது. அதன் முதலாவது யாப்பு 1958ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. அன்று முதல் 17 செப்டம்பர் 2016 இல் அமுலுக்கு வந்த இந்த யாப்பு வரை 3 யாப்புகள் பிரதியீடு செய்யப்பட்டிருக்கின்றன.*

*தனது இலட்சியம், செயல்முறைகள், வரையறைகள், கட்டமைப்பு, அடிப்படையான ஒழுங்கு விதிகள் போன்ற அனைத்தும் அனைவருக்கும் தெளிவாக இருக்க வேண்டும்; அவற்றில் ஒழிவு மறைவுகளுக்கு இடமில்லை என்பதை இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி உறுதியாக விசுவாசித்ததின் விளைவாகவே அது தனது யாப்பை நூல் வடிவில் பிரசுரித்து வருகிறது.*

*இஸ்லாத்தின் சர்வதேசத்தன்மை மற்றும் முஸ்லிம் உம்மத்தின் சர்வதேச வியாபகம் என்பவற்றைக் கருத்தில் கொள்ளும் அதே வேளை இந்த யாப்பானது இலங்கை மண்ணுக்குரிய அமைப்பாக இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியை வரையறை செய்கிறது.*

*இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியோடு இணைந்து பணியாற்றும் அனைவரும், சமூக மற்றும் தேச நலன்களுக்கு பக்கபலமாக இருப்பதையும் இந்த யாப்பு உறுதிப்படுத்துகின்றது.*

*யாப்பானது நீதி, ஒழுங்கு, வெளிப்படைத் தன்மை, வகை கூறல் என்பவற்றின் சின்னமாக இருக்கின்றது என்பதால் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி அத்தகைய விழுமியங்களைப் பாதுகாப்பதில் என்றும் முழு மூச்சோடு ஈடுபடும். இன்ஷா அல்லாஹ்.*

**ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்**
*அமீர்,*
*இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி*
***01.09.2018***

# இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் யாப்பு

## அத்தியாயம்– I

### பெயர்

*1.* இவ்வமைப்பின் பெயர் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி என்பதாகும். இது ஆங்கிலத்தில் **Sri Lanka Jama'athe Islami** என்றும், சிங்களத்தில் ශ්‍රී ලංකා ජමාඅතේ ඉස්ලාමි என்றும் அழைக்கப்படும். அவ்வாறே இது ஆங்கிலத்தில் **Sri Lanka Islamic Association** எனவும் சிங்களத்தில் ශ්‍රී ලංකා ඉස්ලාමිය සංවිධානය எனவும் அழைக்கப்படலாம். இந்த யாப்பில் இதன் பின்னர் 'ஜமாஅத்' எனக் குறிப்பிடப்படும்.

### கொள்கை

*2.* ஜமாஅத்தின் கொள்கை இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடான 'லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என்பதாகும். அதாவது, ''வணங்கி வழிபடத் தகுந்தவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை; முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்'' என்பதாகும்.

### இலட்சியம்

*3.* ஜமாஅத்தின் இலட்சியங்கள் வருமாறு:

*அ)* "தீனை நிலை நிறுத்துங்கள்; அதில் பல பிரிவுகளாகப் பிரிந்து விடாதீர்கள்" எனும் அல்குர்ஆனின் கட்டளையை நிறைவேற்ற முயற்சித்தல்.

*ஆ)* வாழ்வின் சகல அம்சங்களையும் இஸ்லாத்தின் போதனைப் பிரகாரம் மீளமைத்தல்.

*இ)* அன்பு, சகோதரத்துவம், பரஸ்பர உறவு, மனித நேயம் போன்ற உயரிய விழுமியங்களை மேம்படுத்தல்.

*ஈ)* நாட்டின் முன்னேற்றம், அபிவிருத்தி என்பவற்றில் பங்களிப்பு வழங்குதல்.

## செயல்முறை

4. ஜமாஅத்தின் செயல்முறைகள் வருமாறு:

அ) இஸ்லாத்தைக் கற்க ஊக்கமளித்தல், உதவுதல்.

ஆ) இஸ்லாத்தைப் பற்றிய சரியான புரிதல்களை முன் வைத்தல்.

இ) இஸ்லாத்தை நடைமுறைப்படுத்த முஸ்லிம்களுக்கு வழி காட்டல்களை வழங்குதல்.

ஈ) இஸ்லாத்தை 'சமயம்' எனும் சொல்லால் கருதப்படும் குறுகிய பொருளிலன்றி, எல்லாக் காலத்துக்கும் எல்லா இடத்துக்கும் அனைத்துலக மக்களுக்குமுரிய வாழ்க்கைத் திட்டம் என்ற வகையில், தம் வாழ்வின் சகல துறைகளையும் இஸ்லாமிய வழியில் அமைத்து வாழ விரும்பும் தனி மனிதர்களையும் அத்தகையவர்களைக் கொண்ட இஸ்லாமியக் குடும்பங்களையும் இஸ்லாமிய சமூக சூழலையும் உருவாக்குதல்.

உ) பொதுவாக இலங்கைப் பிரஜைகளுக்கும் குறிப்பாக இலங்கை முஸ்லிம்களுக்கும் பயனளிக்கக்கூடிய சமூகநலத் திட்டங்களை முன்னெடுத்தல்.

ஊ) சமூகங்களுக்கு மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வையும் நல்லெண்ணத்தையும் வளர்க்க உதவும் செயற்திட்டங் களை முன்னெடுத்தல்.

எ) மனித நலன்கள், மனித உரிமைகள் முதலானவற்றை உறுதிப்படுத்துவதில் பங்களிப்பை வழங்குதல்.

ஏ) இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் பணியில் பங்க ளிப்பை வழங்குதல்.

ஐ) நாட்டின் அபிவிருத்திக்கும் அமைதிக்குமான செயற் திட்டங்களில் பங்களிப்புச் செய்தல்.

ஒ) உறுப்புரை 3இல் குறிப்பிடப்பட்டுள்ள இலட்சியங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான அல்லது அதற்கு

வலுச் சேர்க்கின்ற பொருத்தமான ஏனைய செயல்முறை களை மேற்கொள்ளல்.

## வழிகாட்டல் தத்துவங்கள்

5. ஜமாஅத்தின் அகீதா (கொள்கை)வும் அமல் (செயற்பாடு) களும் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா என்பவற்றின் அடிப்படை யிலும் அவை இரண்டுக்கும் 'அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ' வழங்கும் விளக்கத்தின் அடிப்படையிலும் அமையும்.

6. ஜமாஅத்தின் சகல செயற்பாடுகளும் இஸ்லாத்தின் நடுநிலைக் கோட்பாட்டைப் பேணியதாக இருக்கும்.

7. இஸ்லாம் வலியுறுத்துகின்ற மானுட விழுமியங்களை ஜமாஅத் முழுமையாகப் பேணி நடக்கும்.

8. ஜமாஅத்தே இஸ்லாமி என்ற பெயரில் அல்லது வேறு பெயர்க ளில் உள்நாட்டிலோ வெளிநாடுகளிலோ இயங்கும் எந்த இயக்கத்துடனும் ஜமாஅத் எவ்விதக் கட்டுப்பாட்டுடன் கூடிய தொடர்பையும் கொண்டிராது. ஜமாஅத் சுதந்திரமாக இயங்கும்.

9. ஜமாஅத் தனது செயற்பாடுகளில் சாத்விகமான; சட்டபூர்வமான வழிமுறைகளையே கையாளும்.

10. ஜமாஅத், கட்சி அரசியலுக்கு அப்பாலிருந்தே செயற்படும்.

# அத்தியாயம்– 2

# அங்கத்துவம்

## அங்கத்துவம்

11. ஜமாஅத்தின் அங்கத்துவம் இரு வகைப்படும்:

அ) முன்தஸிப் அங்கத்துவம்: இவ் அங்கத்துவத்தைப் பெறு பவர் முன்தஸிப் அங்கத்தவர் என அழைக்கப்படுவார்.

ஆ) இணை அங்கத்துவம்: இவ் அங்கத்துவத்தைப் பெறுபவர் இணை அங்கத்தவர் என அழைக்கப்படுவார்.

12. ஒருவருக்கு இணை அங்கத்துவம் வழங்கப்படும்போது, மொத்த

*இணை அங்கத்தவர்களின் எண்ணிக்கை மொத்த முன்தஸிப் அங்கத்தவர்களின் எண்ணிக்கையின் 10% ஐ தாண்டவில்லை என்பதை மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.*

## அங்கத்துவத் தகைமைகள்

### முன்தஸிப் அங்கத்துவம்:

*13.* *ஒரு முன்தஸிப் அங்கத்தவருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் வருமாறு:*

- *அ)* *இலங்கைப் பிரஜையாக இருத்தல்.*
- *ஆ)* *23 வயதைத் தாண்டியவராக இருத்தல். இதில் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா விதிவிலக்கு அளிக்கலாம்.*
- *இ)* *இஸ்லாத்தைக் கற்றுக் கொள்வதிலும் செயற்படுத்துவதிலும் முனைப்பாக இருப்பதுடன் பிறரையும் அதனைக் கற்று அதன்படி நடக்கத் தூண்டுவதிலும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருத்தல்.*
- *ஈ)* *இஸ்லாம் விதித்திருக்கும் அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றுவதோடு ஸுன்னத்தான விடயங்களையும் பேணி வருதல்.*
- *உ)* *தனது வாழ்வில் ஹலால்-ஹராம் பேணுதல்.*
- *ஊ)* *இந்த அங்கத்துவத்தை அடைவதற்குரிய ஜமாஅத்தின் பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்திருத்தல்.*
- *எ)* *ஜமாஅத்தின் கொள்கை, இலட்சியம், கட்டமைப்பு, செயல்முறை மற்றும் கட்டுப்பாடுகளை மதித்தலும் அங்கீகரித்தலும் செயற்படுத்தலும்.*
- *ஏ)* *யாப்பின் ஏற்பாடுகளை மதித்து, ஏற்று, அங்கீகரித்து செயல்படுத்திப் பாதுகாத்தல்.*

### இணை அங்கத்துவம்:

*14.* *ஓர் இணை அங்கத்தவருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் வருமாறு:*

அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல்.

ஆ) 35 வயதைத் தாண்டியவராயிருத்தல்.

இ) இஸ்லாத்தைக் கற்றுக் கொள்வதிலும் செயல்படுத்துவ-திலும் ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருத்தல்.

ஈ) இஸ்லாம் விதித்திருக்கும் அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றுதல்.

உ) தனது வாழ்வில் ஹலால்-ஹராம் பேணுதல்.

ஊ) இணை அங்கத்துவத்தை அடைவதற்குரிய ஜமாஅத்தின் பயிற்சிநெறிகளை பூர்த்தி செய்திருத்தல்.

எ) ஜமாஅத்தின் கொள்கை, இலட்சியம், கட்டமைப்பு, செயல்முறை மற்றும் கட்டுப்பாடுகளை மதித்தலும் அங்கீகரித்தலும் செயற்படுத்தலும்.

ஏ) யாப்பின் ஏற்பாடுகளை மதித்து, ஏற்று, அங்கீகரித்து செயற்படுத்திப் பாதுகாத்தல்.

## அங்கத்தவர் உரிமைகள்

### முன்தஸிப் அங்கத்தவர்களின் உரிமைகள்:

**15.** ஒரு முன்தஸிப் அங்கத்தவரின் உரிமைகள் வருமாறு:

அ) அல்மஜ்லிஸுல் ஆம், பிராந்திய அங்கத்தவர் சபை, கிளை அங்கத்தவர் சபை என்பவற்றில் அங்கத்துவம் வகித்தல்.

ஆ) யாப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய தேசிய, பிராந்திய, உப பிராந்-திய, கிளை மட்டங்களில் வாக்களித்தல்.

இ) யாப்பின் ஏற்பாடுகளுக்கமைய தேசிய, பிராந்திய, உப பிராந்திய, கிளை மட்டங்களில் பதவிகளை வகித்தல்.

ஈ) யாப்பின் ஏற்பாடுகளுக்கமைய அல்மஜ்லிஸ் மற்றும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா, பிராந்திய, கிளை ஷூராக் களுக்குத் தெரிவு செய்யப்படுதல்.

## இணை அங்கத்தவரின் உரிமைகள்:

*16.* *ஓர் இணை அங்கத்தவரின் உரிமைகள் வருமாறு:*

*அ)* *அல்மஜ்லிஸுல் ஆம் இல் அங்கத்துவம் வகித்தல்.*

*ஆ)* *அமீர் தேர்தலில் வாக்களித்தல்.*

*இ)* *அமீர் மற்றும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவினால் வழங்கப்படும் பதவிகளை வகித்தல்.*

*ஈ)* *அல்மஜ்லிஸ் மற்றும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவுக்கு நியமன அங்கத்தவராக தெரிவு செய்யப்படுதல்.*

## அங்கத்துவம் பெறல்

*17.* *ஒருவருக்கு ஜமாஅத்தின் அங்கத்துவத்தை வழங்கும் அதிகாரம் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவுக்கே உண்டு.*

*18.* *அங்கத்துவத்தைப் பெறுவோர் அனுபந்தம் 1இல் உள்ளவாறு 'ஏற்ற மாற்றங்களுடன்' மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா கூட்டத்தில் அல்லது அல்மஜ்லிஸ் கூட்டத்தில் அல்லது அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டத்தில் அமீர் அல்லது பதில் அமீர் அல்லது பொதுச் செயலாளர் முன்னிலையில் பைஅத் (விசுவாசப் பிரமாணம்) செய்தல் வேண்டும்.*

## அங்கத்துவம் இழத்தல்

*19.* *பின்வரும் நிலைமைகளில் ஜமாஅத் அங்கத்தவர் ஒருவர் தனது அங்கத்துவத்தை இழப்பார்:*

*அ)* *அவர் இலங்கைப் பிரஜா உரிமையை இழத்தல்.*

*ஆ)* *அவர் தனது இராஜினாமாவைச் சமர்ப்பித்து அது மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவினால் ஏற்றுக் கொள்ளப்படல்.*

*இ)* *ஜமாஅத்தின் பணிகளில் ஒரு வருடத்துக்கு மேலாக ஆர்வம் காட்டாதிருத்தல், தான் செய்து கொண்ட பை-அத்திற்கு மாற்றமாக சொல்லாலோ செயலாலோ நடந்து கொள்ளல் ஆகியவற்றில் ஏதாவது ஒரு காரணத்திற்காக அவரை அங்கத்துவத்திலிருந்து நீக்கிவிட மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா முடிவு செய்தல்.*

*ஈ)* *மரணம் சம்பவித்தல்.*

## அங்கத்துவ இடைநிறுத்தம்

*20.* *எந்தவோர் அங்கத்தவரையும் உறுப்புரை 19(இ)இல் கூறப்பட்ட காரணங்களுக்காக அங்கத்துவத்திலிருந்து இடைநிறுத்தும் உரிமை ஜமாஅத் அமீருக்கு உண்டு. அத்தகைய இடைநிறுத்தம் மூன்று மாத காலத்தைத் தாண்டுவதாயின் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் அங்கீகாரம் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.*

## அங்கத்துவ உரிமை இழத்தல்

*21.* *தனது சொந்தத் தேவைக்காக ஜமாஅத் அங்கத்தவர் ஒருவர் வெளிநாடு சென்று, தொடராக மூன்று மாதங்களுக்கு மேல் அங்கு தங்கியிருப்பின், அக்காலப் பகுதியில் அவர் உறுப்புரை 15, 16 இல் கூறப்பட்டுள்ள உரிமைகளை இழப்பார். அவர் நாடு திரும்பியதும் பொதுச் செயலாளருக்கு தன் வருகை பற்றி அறிவிப்பதன் ஊடாக அங்கத்துவ உரிமைகளை மீளப் பெறுவார்.*

## அத்தியாயம்– 3

## மத்திய கட்டமைப்பு

*22.* *நிருவாக ஏற்பாடுகளுக்காக ஜமாஅத்தின் மத்திய கட்டமைப்பு பின்வருமாறு அமையும்.*

*அ)* *அமீர் (தலைவர்)*

*ஆ)* *நாயிப் அமீர்கள் (பிரதித் தலைவர்கள்)*

*இ)* *பொதுச் செயலாளர்*

*ஈ)* *மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா (மத்திய ஆலோசனை சபை)*

*உ)* *நிறைவேற்று நிருவாக ஷூரா*

*ஊ)* *செயலக ஷூரா*

*எ)* *அல்மஜ்லிஸ் (பிரதிநிதிகள் சபை)*

*ஏ)* *அல்மஜ்லிஸுல் ஆம் (பொதுச் சபை)*

*உ)* *மத்திய நிருவாகப் பதவிகளும் குழுக்களும் சபைகளும்*

## அமீர்

*23.* *ஜமாஅத்தின் தலைவர் அமீர் என அழைக்கப்படுவார்.*

## அமீரின் கடமைகளும் அதிகாரங்களும்

*24.* *ஜமாஅத்தின் யாப்புக்கும் உப விதிகளுக்கும் இயைபாக கொள்கை வகுத்தல், திட்டங்கள் வகுத்தல், தீர்மானங்கள் எடுத்தல், அவற்றைச் செயல்படுத்துதல் முதலானவற்றுக்குத் தலைமைத்துவம் வழங்குதல்.*

*25.* *பொதுவாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஜமாஅத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துதல். சமூகத் தலைமைகளுடன் உறவுகளைக் கட்டியெழுப்புதலும் பேணிப் பாதுகாத்தலும்.*

*26.* *மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா, நிறைவேற்று நிருவாக ஷூரா என்பவற்றின் தலைவராக செயற்படுதல்.*

*27.* *பொதுவாக மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா, நிறைவேற்று நிருவாக ஷூரா, அல் மஜ்லிஸுல் ஆம் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தல்.*

*28.* *அன்றாட விவகாரங்களில் ஜமாஅத்தின் யாப்பு, உப விதிகள் என்பவற்றுக்கு ஏற்ப தீர்மானம் எடுத்தல்.*

*29.* *உடனடித் தீர்வு எட்டப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகளின் போது மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவைக் கூட்ட முடியாதவிடத்து சாத்தியமான மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அங்கத்தவர்களின் ஆலோசனையுடன் தீர்மானங்கள் எடுத்தல். மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் அடுத்த கூட்டத்தில் அத்தீர்மானங்களுக்கான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.*

*30.* *நிருவாகத்தை வினைத்திறனாக நடத்தும் பொருட்டு நாயிப் அமீர்களில் ஒருவரையும் பொதுச் செயலாளரையும் நிதிச் செயலாளரையும் மஜ்லிஸுஷ் ஷூரா உறுப்பினர்களில் இருந்து நியமித்தல். ஏனைய செயலாளர்களையும் குழுக்களையும் தேவையான ஏனைய உத்தியோகத்தர்களையும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் ஆலோசனையுடன் நியமித்தல்.*

31. ஜமாஅத்தின் பதவியினரை, குழுக்களை, பிராந்தியங்களை, உப பிராந்தியங்களை, கிளைகளை இடைநிறுத்தல். அடுத்துவரும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவில் அத்தகைய தீர்மானங்களுக்கு அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

## அமீர் பதவிக்கான தகைமை

32. முன்தஸிப் அங்கத்தவராக இருத்தல்.

33. அமீர் தேர்தல் நடைபெறும் தவணைக்கு முந்தைய ஐந்து அல்மஜ்லிஸ்களில் குறைந்தது மூன்றில் அங்கத்தவராக இருந்திருத்தல்.

## அமீரின் பதவிக் காலம்

34. அமீர் பதவியின் ஒரு தவணைக் காலம் நான்கு வருடங்களைக் கொண்டதாகும்.

35. தொடர்ச்சியாக இரண்டு தவணைகள் அல்லது இந்த யாப்பின், இதற்கு முந்திய யாப்பின் ஏற்பாடுகளுக்கமைய இரண்டு தடவைகளுக்குமேல் தொடர்ச்சியாக அமீராகப் பதவி வகித்த ஒருவர் அடுத்துவரும் தவணையில் அமீராகப் பதவி வகிக்கத் தகுதி பெறமாட்டார். எனினும், ஒருவர் தொடர்ச்சியாக 3வது தவணைக் காலத்துக்கும் பதவி வகிப்பதற்குப் பொருத்தமானவர் என்று மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா தீர்மானிக்குமிடத்து, அவரை அமீர் தெரிவுக்காக மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அல்மஜ்லிஸுக்கு முன்மொழியலாம். அதனை அல்மஜ்லிஸ் அங்கீகரிக்குமிடத்து அவர் மூன்றாம் தடவையும் அமீர் தெரிவுக்கு தகுதி பெறுவார். இவ்வகையில் ஒருவரை ஒரு தடவை மாத்திரமே மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவினால் முன்மொழிய முடியும்.

## அமீர் தெரிவு

36. அமீர் அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டத்தில் அல்மஜ்லிஸுல் ஆம் அங்கத்தவர்களால் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவார்.

37. அல்மஜ்லிஸ் அவசியம் எனக் கருதும் பட்சத்தில், அமீராகுவதற்குத் தகுதியுடைய ஆகக்கூடிய மூவரை இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்து அவர்களின் பெயர்களை அமீர் தெரிவுக்காக அல்மஜ்லிஸுல் ஆம் இற்கு முன்மொழியலாம்.

*அவ்வாறு முன்மொழியப்படுபவர்களது பெயர்களை அமீர் தேர்தல் நடைபெறுவதற்கு முன் பொதுச் செயலாளர் அறிவிப்பார். எவ்வாறாயினும், இவர்கள் அல்லாதோருக்கும் வாக்களிக்கும் உரிமை அல்மஜ்லிஸுல் ஆம் அங்கத்தவர்களுக்கு உண்டு.*

**38.** *மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அவசியம் எனக் கருதும் பட்சத்தில், அது, உறுப்புரை 37ல் குறிப்பிட்ட நோக்கத்துக்காக அமீராகுவதற்குத் தகுதியுடைய, ஆகக் கூடியது மூன்று பேரை அல்மஜ்லிஸுக்கு முன்மொழியலாம். எவ்வாறாயினும் அல்மஜ்லிஸ் அங்கத்தவர்கள் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவினால் முன்மொழியப்பட்டவர்களுக்கோ அல்லது இந்த யாப்பின் படி அமீராகுவதற்குத் தகுதியுடைய ஏனையவர்களுக்கோ வாக்களிக்க முடியும்.*

**39.** *அமீர் தெரிவு நடைபெறும் அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டத்துக்கான அழைப்பிதழில் அமீர் தேர்தல் நடைபெறுவது பற்றிக் குறிப்பிடப்படல் வேண்டும்.*

**40.** *அமீராகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர், அப்பதவியை ஏற்க மறுக்கும் பட்சத்தில் மீண்டும் தேர்தல் நடத்தப்படும்.*

## அமீரின் பைஅத் (விசுவாசப் பிரமாணம்)

**41.** *அமீராகப் பதவி ஏற்பவர் அநுபந்தம் 2இல் கூறப்பட்ட பிரகாரம் அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டத்தில் பைஅத் செய்தல் வேண்டும். அமீரின் பைஅத் அல்மஜ்லிஸுல் ஆம் இல் நடைபெற முடியாதவிடத்து அப்போது பதவியிலுள்ள மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அல்லது அல்மஜ்லிஸ் முன்னிலையில் நடைபெற வேண்டும்.*

**42.** *அமீரின் பைஅத்தை அடுத்து அல்மஜ்லிஸுல் ஆம் அங்கத்தவர்கள் அநுபந்தம் 3இன் பிரகாரம் அமீருக்கு பைஅத் செய்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட அமீருக்கான அங்கத்தவர் பைஅத் அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டத்தில் இடம் பெற்றால் ஜமாஅத் அங்கத்தவர்கள் அனைவரும் அமீருக்கு பைஅத் செய்ததாகக் கொள்ளப்படும்.*

**43.** *புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட அமீருக்கான அங்கத்தவர் பைஅத் அல்மஜ்லிஸுல் ஆம் இல் நடைபெறாதவிடத்து, அடுத்துவரும் ஆறு மாத காலத்திற்குள் அமீரின் முன்னிலையிலோ*

அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரின் முன்னிலையிலோ அங்கத்தவர்கள் பைஅத் செய்யலாம். மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் 51% க்கு மேற்பட்டோர் பைஅத் செய்தால் ஜமாஅத் அங்கத்தவர்கள் அனைவரும் அமீருக்கு பைஅத் செய்ததாகக் கொள்ளப்படும்.

**அமீர் பதவி வெற்றிடமாகுதல்**

44. அமீர் பதவி பின்வரும் நிலைமைகளில் வெற்றிடமாகும்.

அ) அமீரின் இராஜினாமாவை மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அங்கீகரித்தல்.

ஆ) மரணம் சம்பவித்தல்.

இ) உறுப்புரை 45ல் குறிப்பிட்டபடி மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அல் மஜ்லிஸ் அங்கீகரித்தல்.

45. அமீராகப் பதவி வகிக்கும் ஒருவர்,

அ. இஸ்லாத்திற்கு முரணான நம்பிக்கைகளையோ அல்லது நடத்தைகளையோ கொண்டிருத்தல்.

ஆ. ஜமாஅத்தின் இலட்சியங்களுக்கு மாற்றமான இலட்சியங்களைக் கொண்டிருத்தல்.

இ. தனது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றாதிருத்தல்

ஈ. தனது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்தல்.

உ. ஜமாஅத்தின் யாப்பை வேண்டுமென்றே மீறுதல்.

ஊ. தனது சொந்தத் தேவைகள் காரணமாக தொடர்ச்சியாக மூன்று மாத காலத்திற்கு அதிகமாக அல்லது தனது ஒரு பதவிக் காலத்தில் ஆறு மாதங்களுக்கு அதிகமாக அமீருக்குரிய கடமைகளை நிறைவேற்ற முடியாத நிலையிலிருத்தல்

ஆகிய விடயங்களில் ஒன்று அல்லது பல காரணங்களினால் ஜமாஅத்தின் அமீராகத் தொடர்ந்து கடமையாற்றத் தகுதி அற்றவர் எனும் பிரேரணை ஒன்றை மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா கூட்டமொன்றில் சமுகமளித்த மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அங்கத்தவர்களில் 2/3 பங்கினர் ஏற்று வாக்களிப்பதன் ஊடாக

அமீரைப் பதவியிலிருந்து இடைநிறுத்தி வைக்க மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவுக்கு அதிகாரம் உண்டு. அவ்வாறு பதவியிலிருக்கும் அமீர் இடைநிறுத்தப்படுமிடத்து தொடர்ந்து வரும் ஒரு மாத காலத்திற்குள் பொதுச் செயலாளரினால் அல்மஜ்லிஸ் கூட்டப்பட்டு இத்தீர்மானம் அதில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இத்தீர்மானம் அந்தக் கூட்டத்தில் சமுகமளித்தோரின் 2/3 பெரும்பான்மையுடன் அங்கீகரிக்கப்பட்டால் அமீர் பதவி இழப்பார்.

46. உறுப்புரை 45ல் குறிப்பிடப்பட்ட வகையான ஒரு தீர்மானம் அல்மஜ்லிஸால் நிராகரிக்கப்படும் பட்சத்தில் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா பதவி விலக வேண்டும்; அமீர் தொடர்ந்து பதவி வகிப்பார். இந்நிலையில், அதே கூட்டத்தில் புதிய மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா தெரிவும் நடைபெற வேண்டும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா ஏற்கனவே பதவியிலிருந்த மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் எஞ்சியுள்ள தவணைக் காலம் வரை பதவியிலிருக்கும்.

47. அமீர் தனது பதவியிலிருந்து விடுமுறை பெற்றுக் கொள்ளும் காலத்தில் பொதுச் செயலாளரை அல்லது நாயிப் அமீர்களிலிருந்து ஒருவரை பதில் அமீராக நியமிக்க முடியும்.

48. உறுப்புரை 44, 45ல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின்படி அமீர் பதவி வெற்றிடமானால் பொதுச் செயலாளர் தற்காலிக அமீராகக் கடமையாற்றுவார். அவர் ஒரு வாரத்துக்குள் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவைக் கூட்ட வேண்டும். அக்கூட்டத்தில் இடைக்கால அமீர் ஒருவர் தெரிவு செய்யப்படுவார். இக்கூட்டத்துக்கான அழைப்பிதழில் இடைக்கால அமீர் தெரிவு பற்றி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். இவ்வாறு தெரிவு செய்யப்படும் இடைக்கால அமீர் புதிய அமீர் ஒருவர் தெரிவு செய்யப்படும் வரை அமீருக்குரிய சகல அதிகாரங்களுடனும் கடமை புரிவார். அத்தகைய அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டம் அடுத்த ஒரு வருடத்துக்குள் கூட்டப்படல் வேண்டும். அங்கு தெரிவு செய்யப்படும் புதிய அமீர் வெற்றிடமான அமீரின் எஞ்சியுள்ள தவணைக் காலத்துக்குப் பதவி

வகிப்பார். இப்பதவிக் காலம் உறுப்புரை 35இன் நோக்கத்துக் காக கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

**நாயிப் அமீர்:**

49. ஜமாஅத்தில் மூன்று நாயிப் அமீர்கள் இருப்பர்.

**நாயிப் அமீர் பதவிக்கான தகைமை**

50. நாயிப் அமீர் பதவிக்குரிய தகைமைகள் வருமாறு:

அ. முன்தஸிப் அங்கத்தவராகவும் அல்மஜ்லிஸ் அங்கத்த வராகவும் இருத்தல்.

ஆ. தெரிவு அல்லது நியமனம் நடைபெறும்போது 55 வயதுக்கு உட்பட்டவராயிருத்தல். ஏற்கனவே அமீராகப் பதவி வகித்த ஒருவருக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

இ. குறைந்தது இரு தடவைகள் தொடர்ச்சியாக அல்மஜ்லிஸ் அங்கத்தவராக இருந்திருத்தல்.

**நாயிப் அமீரின் அதிகாரங்களும் கடமைகளும்**

51. நாயிப் அமீரின் அதிகாரங்களும் கடமைகளும் வருமாறு:

அ. யாப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அமீர் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் ஆலோசனையுடன் தனது அதிகாரங்கள், கடமைகளிலிருந்து குறித்த நாயிப் அமீருக்குக் குறித்தொதுக்கும் அதிகாரங்களும் கடமைகளும்.

ஆ. உறுப்புரை 47இன்படி பதில் அமீராக அமீரினால் நியமிக் கப்படுதல்.

இ. மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் தீர்மானத்தின் படி அல்மஜ்லிஸ் கூட்டங்களுக்கு தலைமை வகித்தல்

**நாயிப் அமீர் தெரிவும் நியமனமும்**

52. நாயிப் அமீர்களில் இருவர் அல்மஜ்லிஸ் வருடாந்தக் கூட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவர்; ஒருவர் அமீரினால் நியமிக்கப்படுவார்.

## நாயிப் அமீர்களின் பைஅத் (விசுவாசப் பிரமாணம்)

*53.* *நாயிப் அமீராகப் பதவி ஏற்பவர் ஏற்ற மாற்றங்களுடன் அநுபந்தம் 5இல் கூறப்பட்ட பிரகாரம் பைஅத் செய்தல் வேண்டும். இது அல்மஜ்லிஸுல் ஆம் அல்லது அல்மஜ்-லிஸ் அல்லது மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அமர்வொன்றில் இடம்பெறும்.*

## நாயிப் அமீர் பதவி வெற்றிடமாகுதல்

*54.* *நாயிப் அமீர் பதவி பின்வரும் நிலைமைகளில் வெற்றிடமாகும்.*

*அ) அவரது இராஜினாமாவை மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அங்கீகரித்தல்.*

*ஆ) மரணம் சம்பவித்தல்.*

*இ) அமீரின் நியமனம் மூலம் பதவி பெறும் நாயிப் அமீர் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் ஆலோசனையுடன் அமீர் அவர்களினால் பதவி நீக்கப்படல்.*

*ஈ) அல்மஜ்லிஸினால் தெரிவு செய்யப்பட்ட நாயிப் அமீரினை பதவி நீக்கும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் தீர்மானத்தை அல்மஜ்லிஸ் அங்கீகரித்தல்.*

*55.* *அல்மஜ்லிஸினால் தெரிவு செய்யப்பட்ட நாயிப் அமீரினை உறுப்புரை 45ல் குறிப்பிடப்பட்டதையொத்த காரணங்களுக்காக பதவியிலிருந்து இடைநிறுத்தும் அதிகாரம் அமீருக்கு உண்டு. இத்தகைய இடைநிறுத்தம் மூன்று மாதத்தைத் தாண்டுவதாயின் அல்மஜ்லிஸின் அங்கீகாரம் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.*

*56.* *வெற்றிடமாகும் நாயிப் அமீர் பதவி, தேர்தல் மூலம் பதவிக்கு வந்தவருடையதாயின் அல்மஜ்லிஸில் மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டு அவ்வெற்றிடம் நிரப்பப்படும். அமீரின் நியமனம் ஊடாக பதவிக்கு வந்தவருடையதாயின் அமீர் மற்றொருவரை நியமிப்பதன் ஊடாக நிரப்பப்படும்.*

**பொதுச் செயலாளர்:**

*57.* ஜமாஅத் ஒரு பொதுச் செயலாளரைக் கொண்டிருக்கும். அவர் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் ஆலோசனையுடன் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அங்கத்தவர்களிலிருந்து அமீரினால் நியமிக்கப்படுவார்.

**பொதுச் செயலாளரின் அதிகாரங்களும் கடமைகளும்:**

*58.* பொதுச் செயலாளரின் அதிகாரங்களும் கடமைகளும் வருமாறு:

அ) அமீரின் ஆலோசனையுடன் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா, நிறைவேற்று நிருவாக ஷூரா, அல்மஜ்லிஸ், அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டங்களைக் கூட்டுதல்.

ஆ) ஜமாஅத்தின் சகல ஆவணங்களுக்கும் சொத்துக்களுக்கும் உத்தியோகபூர்வ இலச்சினைக்கும் முத்திரைக்கும் காப்பாளாராக இருத்தல்.

இ) ஜமாஅத்தின் உத்தியோகபூர்வ ஆவணங்கள், தொடர்பாடல்கள் அனைத்திலும் ஜமாஅத்தின் உத்தியோகபூர்வ முத்திரை இடுவதற்குப் பொறுப்பாக இருத்தல்.

ஈ) ஜமாஅத்தினுடைய நிர்வாகக் கட்டமைப்பின் அனைத்துக் கூறுகளுக்குமிடையிலான இணைப்பாளராக இருத்தல்.

உ) செயலக ஷூராவுக்கு தலைமைத்துவம் வழங்குதல்.

ஊ) அமீர் தெரிவுக்கான அல்மஜ்லிஸின் முன்மொழிவுகளை அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டத்தில் அறிவித்தல்.

**மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா (மத்திய ஆலோசனை சபை)**

*59.* அமீருடன் இணைந்து ஜமாஅத்தின் யாப்புக்கு இயைபாக கொள்கை வகுத்தல், தீர்மானங்கள் எடுத்தல், திட்டங்கள் வகுத்தல், அவற்றைச் செயல்படுத்தல் முதலியவற்றுக்கு பொறுப்பான உயர் சபையாக மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா விளங்கும்.

*60.* இதன் தலைவராக அமீர் கடமையாற்றுவார்.

*61.* இது அமீர், 3 நாயிப் அமீர்கள் உட்பட 29 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

*62.* மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் அமீர், 3 நாயிப் அமீர்கள் தவிர்ந்த 25 அங்கத்தவர்களில்

அ. பதினாறு (16) உறுப்பினர்கள் அல்மஜ்லிஸில் அங்கத்துவம் வகிக்கும் முன்தஸிப் அங்கத்தவர்களில் இருந்து அல்மஜ்லிஸில் அங்கம் வகிக்கும் முன்தஸிப், இணை அங்கத்தவர்களால் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவர்.

ஆ. மூன்று (3) உறுப்பினர்கள் பெண்கள் அணி தேசியக் குழு அங்கத்தவர்களிலிருந்து அக்குழு அங்கத்தவர்களினால் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவர்.

இ. நான்கு (4) உறுப்பினர்கள் அல்மஜ்லிஸ் அங்கத்தவர்களிலிருந்தும் இரண்டு (2) உறுப்பினர்கள் பெண்கள் அணி தேசியக் குழு அங்கத்தவர்களில் இருந்தும் அமீர் அவர்களினால் நியமிக்கப்படுவர்.

**63.** ஒருவர் தெரிவு மூலம் தொடர்ச்சியாக மூன்று தவணைகள் மட்டும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவில் அங்கத்துவம் பெற முடியும். இதனை நடைமுறைப்படுத்தும் வகையில் தகைமை இழக்கும் நபர்களின் பெயர்கள் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா தேர்தல் வாக்குச் சீட்டில் இருந்து நீக்கப்படும். எனினும், ஹிஜ்ரி 1438ம் ஆண்டுக்கான மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா தேர்தலில் இவ்விதிப்படி தகைமை இழக்க வேண்டியவர்களில் 50% பங்கினர் மட்டுமே தகைமை இழப்பர். இவ்வாறு தகைமை இழப்பவர்களின் பட்டியலை பதவியிலிருக்கும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா பரஸ்பர கலந்தாலோசனையின் அடிப்படையில் முடிவு செய்யும்.

**64.** மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா உறுப்பினர்கள் அநுபந்தம் 4இல் உள்ளபடி விசுவாசப் பிரமாணம் செய்தல் வேண்டும்.

**65.** மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா உறுப்பினர் ஒருவர் மரணித்தல் அல்லது இராஜினாமா செய்தல் அல்லது முன்தஸிப் அங்கத்துவத்தை இழத்தல் அல்லது உறுப்புரை 69ல் கூறப்பட்டபடி பதவி நீக்கம் செய்யப்படல் ஆகிய காரணங்களால் அவர் வகித்த அங்கத்துவம் வெற்றிடமாகும்.

**66.** மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவில் ஏற்படும் முதல் மூன்று வெற்றிடங்களை அமீர் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் ஆலோசனையுடன் நிரப்புவார்.

67. ஒரு தவணையில் ஏற்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மூன்றைத் தாண்டும்போது, வெற்றிடங்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினருடையதாயின், தெரிவுப் பட்டியலில் முறையே அடுத்தடுத்த இடங்களில் உள்ளவர்களைக் கொண்டு நிரப்பப்படும். வெற்றிடங்கள் அமீரின் நியமனங்களிலிருந்து ஏற்பட்டதாயின் அமீர் நியமனம் மூலம் அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

68. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் வெற்றிடங்களின் எண்ணிக்கை மொத்த ஷூரா உறுப்பினர்களின் எண்ணிக்கையின் 40 வீதத்தினைத் தாண்டினால் அல்மஜ்லிஸ் கூட்டப்பட்டு இரகசிய வாக்கெடுப்பு மூலம் அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

69. மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையேனும் கூட்டப்படல் வேண்டும்.

70. மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா உறுப்பினர் ஒருவர் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா நியமிக்கும் விசாரணைக் குழுவின் பரிந்துரையின் பின் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா உறுப்பினராகத் தொடர்ந்திருப்பதற்குத் தகுதியற்றவர் என மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவினால் தீர்மானிக்கப்படுமிடத்து அமீரினால் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அங்கத்துவத்திலிருந்து அவர் இடைநிறுத்தப்படவோ பதவி நீக்கப்படவோ முடியும்.

71. அமீரின் ஏதேனும் முடிவு பற்றி மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா முரண்படுமிடத்து மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் பெரும்பான்மை அங்கத்தவர்களது முடிவை அமீர் ஏற்றுக் கொள்ள வேண்டும். மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் முடிவுடன் தான் உடன்பட முடியாதென அமீர் கருதினால் அதனை அவர் அல்மஜ்லிஸின் தீர்வுக்கு விட முடியும். அப்போது அல்மஜ்லிஸின் முடிவே இறுதியானதாகும்.

## நிறைவேற்று நிருவாக ஷூரா

72. ஜமாஅத் ஒரு நிறைவேற்று நிருவாக ஷூராவைக் கொண்டிருக்கும். அதன் தலைவராக அமீர் செயற்படுவார். அது அமீர், பொதுச் செயலாளர், நாயிப் அமீர்கள், நிதிச் செயலாளர் மற்றும்

அமீர், மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் ஆலோசனையுடன் நியமிக்கும் 3 மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அங்கத்தவர்கள் ஆகிய 9 அங்கத்தவர்களைக் கொண்டிருக்கும்.

73. ஜமாஅத்தின் கொள்கைத் தீர்மானங்கள் அல்லாத நிதி, நிர்வாகம், ஒழுக்காற்று மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் போன்ற விடயங்களில் தீர்மானம் எடுக்கும் சபையாக இது இருக்கும். இச்சபை தேவைப்படும்போது அமீரின் ஆலோசனைப்படி பொதுச் செயலாளரால் கூட்டப்படும்.

**செயலக ஷூரா**

74. மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் கடமைகளையும் பொறுப்புக்களையும் இலகுபடுத்துவதற்காக ஜமாஅத் செயலக ஷூரா எனும் ஒரு சபையைக் கொண்டிருக்கும். அதன் அமைப்பு, அங்கத்தவர் எண்ணிக்கை, கடமைகள், அதிகாரங்கள் என்பவற்றை மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா தீர்மானிக்கும். அதன் அங்கத்தவர்களை மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா நியமிக்கும். அதன் தலைவராக பொதுச் செயலாளர் இருப்பார்.

**அல்மஜ்லிஸ் (பிரதிநிதிகள் சபை)**

75. ஜமாஅத்தில் கொள்கை வகுத்தல், தீர்மானம் மேற்கொள்ளல் முதலியவற்றில் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவுக்கு அடுத்த படித்தரத்தில் உள்ள சபை அல்மஜ்லிஸ் ஆகும்.

76. அல்மஜ்லிஸ் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 197 ஆகும். இவர்களில் 150 பேர் பிராந்திய அங்கத்தவர் சபைகளிலிருந்து பிராந்திய சபை அங்கத்தவர்களினால் தெரிவு செய்யப்படுவர். மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் ஆலோசனையுடன் ஜமாஅத் அங்கத்தவர்களில் இருந்து 26 பேர் அமீரினால் நியமிக்கப்படுவர். பெண்கள் அணியின் தேசியக் குழு உறுப்பினர்கள் 21 பேரும் பதவி வழியாக இதில் அங்கத்துவம் பெறுவர்.

77. பதவியில் இருக்கும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா உறுப்பினர்கள், பிராந்திய நாஸிம்கள் அல்மஜ்லிஸ் அங்கத்துவத்துக்கு தெரிவு செய்யப்படாதவிடத்து அவர்கள் பதவி வழியாக அல்மஜ்லிஸில் அங்கத்துவம் பெறுவர். இவ்வகையான அங்கத்துவம் உறுப்புரை 76இல் குறிப்பிடப்பட்ட அங்கத்துவ எண்ணிக்கைக்குப் புறம்பானதாகக் கொள்ளப்படும்.

78. உறுப்புரை 76இல் குறிப்பிடப்பட்ட பிராந்தியங்களிலிருந்து தெரிவுசெய்யப்படும் 150 அங்கத்தவர்களின் தெரிவு மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா தெரிவு நடைபெறும் அதே ஆண்டின் ஷவ்வால் - துல்ஹஜ் காலப்பகுதியில் நடைபெறும் பிராந்திய அங்கத்தவர் சபை வருடாந்தக் கூட்டங்களில் இடம்பெறும். இவ்வாறு தெரிவு செய்யப்படும் அல்மஜ்லிஸ் அடுத்துவரும் ஸபர் மாதத்தில் பதவி ஏற்கும்.

79. அல்மஜ்லிஸ் அமர்வுகளுக்கு நாயிப் அமீர்களில் இருந்து மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா தீர்மானிக்கும் ஒருவர் தலைமை வகிப்பார்.

80. அல்மஜ்லிஸில் பிராந்தியங்களினால் தெரிவு செய்யப்பட்டவர்களின் வெற்றிடங்கள் பிராந்திய தெரிவுப் பட்டியலில் அடுத்துள்ளவர்களில் இருந்து நிரப்பப்படும். அமீர் நியமனத்தில் வெற்றிடமாகும் இடங்களை மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் ஆலோசனையுடன் அமீர் நிரப்புவார்.

81. அல்மஜ்லிஸ் வருடத்தில் குறைந்தது இரு தடவைகளாவது கூட்டப்பட வேண்டும். இவற்றில் ஒன்று அதன் வருடாந்தக் கூட்டமாக இருத்தல் வேண்டும். அது முஹர்ரம் மாதத்தில் நடைபெறும்.

## அல்மஜ்லிஸின் அதிகாரங்களும் கடமைகளும்:

82. அல்மஜ்லிஸின் அதிகாரங்களும் கடமைகளும் வருமாறு:

அ. ஜமாஅத்தின் கொள்கை வகுத்தல், தீர்மானம் எடுத்தல் என்பவற்றில் அமீருடனும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவுடனும் இணைந்து செயற்படல்.

ஆ. அல்மஜ்லிஸின் கலந்தாலோசனையின் பின்னரே தீர்மானிக்கப்பட வேண்டுமென அமீர் அல்லது மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா கருதும் விடயங்கள் குறித்து பரிசீலனை செய்து முடிவெடுத்தல்.

இ. இந்த யாப்பின் ஏதேனும் உறுப்புரைகளை திருத்துதலும் இதில் புதிய உறுப்புரைகளை சேர்த்தலும் புதியதொரு யாப்பைக் கொண்டு இதனை மாற்றீடு செய்தலும்.

ஈ. உறுப்புரை 52இன் பிரகாரம் நாயிப் அமீர்கள் இருவரைத் தெரிவு செய்தல்.

உ. உறுப்புரை **62**இன் பிரகாரம் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்.

ஊ. உறுப்புரை **37**இன் பிரகாரம் அமீர் தேர்தலுக்கான முன்மொழிவுகளைச் செய்தல்.

எ. பிரதம தேர்தல் அதிகாரியை நியமித்தல்.

ஏ. உறுப்புரைகள் **111,112**இன் பிரகாரம் கணக்காய்வுக் குழு மற்றும் கணக்காய்வாளரை நியமித்தல்.

## அல்மஜ்லிஸுல் ஆம் (பொதுச் சபை)

**83.** ஜமாஅத்தின் அனைத்து முன்தஸிப் அங்கத்தவர்களும் இணை அங்கத்தவர்களும் பெண்கள் அணியின் அல்மஜ்லிஸ் அங்கத்தவர்களும் அங்கம் வகிக்கும் சபை அல்மஜ்லிஸுல் ஆம் எனப்படும்.

**84.** அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டங்கள் அமீரின் ஆலோசனையுடன் பொதுச் செயலாளரால் கூட்டப்படும்.

**85.** அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டம் இரு வருடங்களுக்கு ஒரு முறையேனும் நடைபெற வேண்டும். அமீர் தேர்தல் நடைபெறும் அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டம் முடிந்தவரை முஹர்ரம் மாதத்தில் நடத்தப்பட வேண்டும். ஏதேனும் காரணத்தினால் முஹர்ரம் மாதத்தில் நடத்தப்பட முடியாது என மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா தீர்மானித்தால் அதே ஆண்டு ஸபர் மாதத்திற்குள் நடத்தப்படல் வேண்டும்.

**86.** அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டங்களுக்கான அழைப்பு குறித்த கூட்ட தினத்துக்கு இரு வாரங்களுக்கு முன் கிடைக்கக் கூடியதாக அங்கத்தவர்களுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**87.** பொதுவாக அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டங்கள் தேசிய ரீதியாகவோ பிராந்தியங்களின் கொத்தணியாகவோ நடைபெறும்.

**88.** அமீர் தேர்தலுக்கான அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டத்தை தேசிய ரீதியாக நடத்த முடியாதிருப்பதாக மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா தீர்மானிக்குமிடத்து பிராந்திய அல்லது பிராந்தியங்களின் கொத்தணி ரீதியாக கூட்டங்களை நடத்தி அமீர் தேர்தல் நடத்தப்பட முடியும்.

## அல்மஜ்லிஸுல் ஆம் இன் அதிகாரங்களும் கடமைகளும்

*89.* அல்மஜ்லிஸுல் ஆம் இன் அதிகாரங்களும் கடமைகளும் வருமாறு:

அ. அமீரைத் தெரிவு செய்தல்.

ஆ. ஜமாஅத் தனது இலக்குகளை அடைவதற்கான ஆலோசனைகளை வழங்குதல்.

*90.* அல்மஜ்லிஸுல் ஆம் கூட்டங்களில் ஜமாஅத்தின் செயற்பாட்டறிக்கை முன்வைக்கப்பட வேண்டும். அது பற்றி கருத்துரைப்பதற்கு அங்கத்தவர்களுக்கு அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

## மத்திய நிருவாகப் பதவிகளும் குழுக்களும் சபைகளும்

*91.* ஜமாஅத்தில் அமீர் மற்றும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவினால் நியமிக்கப்படும் உதவிப் பொதுச் செயலாளர்கள், குழுத் தலைவர்கள், பகுதிச் செயலாளர்கள், பகுதிப் பொறுப்பாளர்கள் மற்றும் அவ்வப்போது நியமிக்கப்படும் ஏனைய குழுக்கள், சபைகள், பதவிகள் என்பனவும் இருக்கும். இப்பதவியினரும் குழுக்களும் சபைகளும் அமீருக்கும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவுக்கும் பொறுப்புக் கூற வேண்டும்.

*92.* மேலே கூறப்பட்ட உத்தியோகத்தர்களினதும் குழுக்களினதும் சபைகளினதும் கடமைகள், அதிகாரங்களை மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா இந்த யாப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய அவ்வப்போது வரையறை செய்யும்.

## அத்தியாயம்– 4

## பிராந்தியக் கட்டமைப்பு

*93.* ஜமாஅத்தின் பிராந்தியக் கட்டமைப்பு பின்வருமாறு அமையும்:

அ. பிராந்தியங்கள்

ஆ. உப பிராந்தியங்கள்

இ. கிளைகள்

94. மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா நிருவாகத்தை இலகுபடுத்துவதற்காக நாட்டில் பிராந்தியங்களையும் அப்பிராந்தியங்களுக்குள் உப பிராந்தியங்களையும் கிளைகளையும் நிறுவும். அவசியமெனக் கருதும் பட்சத்தில் அவற்றைக் கலைக்கும் அதிகாரமும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவுக்கு உண்டு.

95. ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் ஒரு பிராந்திய நாஸிம் இருப்பார். ஜமாஅத்தின் யாப்புக்கும் உப விதிகளுக்கும் அமையவும், மத்திய அமைப்பின் ஒழுங்குகளுக்கும் திட்டமிடலுக்கும் ஏற்பவும் தனது பொறுப்பிலுள்ள பிராந்தியத்தையும் மற்றும் உப பிராந்தியங்கள், கிளைகள் என்பவற்றையும் வழிநடத்துவது பிராந்திய நாஸிமின் பொறுப்பாகும்.

96. பிராந்திய நாஸிம்களை அமீர் நியமிப்பார்.

97. ஒரு பிராந்திய நாஸிம் தொடர்ச்சியாக மூன்று தவணைகளே பதவியிலிருக்கலாம்.

98. மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் ஆலோசனையுடன் பிராந்திய நாஸிம்களை நீக்கும் அதிகாரம் அமீருக்கு உண்டு.

99. ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஒரு பிராந்திய சபை இருக்கும். அக்குறிப்பிட்ட பிராந்தியத்தில் வசிக்கும் முன்தஸிப் அங்கத்தவர்கள் இச்சபையில் அங்கம் வகிப்பர். யாப்பின் இந்த ஏற்பாட்டுக்கு அமைய பிராந்திய அங்கத்தவர் சபையின் அங்கத்துவப் பட்டியலைத் தீர்மானிப்பதில் அமீரின் முடிவே இறுதியானதாகும்.

100. பிராந்திய நாஸிமுக்கு உதவியாக பிராந்திய நாஸிம் உட்பட 9 முதல் 13 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு பிராந்திய ஷூரா இருக்கும். இதில் இருவர் தவிர ஏனையோர் பிராந்திய பிராந்திய அங்கத்தவர் சபையால் தெரிவு செய்யப்படுவர். இருவர் பிராந்திய நாஸிமினால் பிராந்திய ஷூராவின் ஆலோசனையுடன் நியமிக்கப்படுவர்.

101. பிராந்திய நாஸிம் பிராந்திய ஷூராவின் ஆலோசனையுடனும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் அனுமதியுடனும் பிராந்திய ஷூரா அங்கத்தவர்களிலிருந்து ஆகக் கூடியது மூன்று பிரதிப் பிராந்திய நாஸிம்களை நியமிக்கலாம்.

*102.* *பிரதிப் பிராந்திய நாஸிம்களின் கடமைகள் அவ்வப் பிராந்திய ஷூராக்களினால் தீர்மானிக்கப்படும்.*

*103.* *ஜமாஅத்தின் கிளைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நாஸிம் இருப்பார். பிராந்திய நாஸிமினதும் பிராந்திய ஷூராவினதும் வழிகாட்டலின் கீழ் ஜமாஅத்தின் யாப்பு, உப விதிகள், அவ்வப் போதைய தீர்மானங்கள் என்பவற்றுக்கு இயைபாக கிளை நடவடிக்கைகளை அவர் வழிநடத்துவார். கிளை நாஸிம் நேரடியாக கிளை அங்கத்தவர் சபையால் அல்லது கிளை அங்கத்தவர் சபையின் அனுமதியுடன் கிளை ஷூராவினால் தெரிவு செய்யப்படுவார். கிளை நாஸிமாகத் தெரிவு செய்யப் படும் ஒருவர் தொடர்ச்சியாக 3 தவணைகள் மாத்திரமே பதவி வகிக்கலாம்.*

*104.* *கிளை நாஸிமுக்கு உதவியாக 7 முதல் 11 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு கிளை ஷூரா இருக்கும். இதில் இருவர் தவிர ஏனையோர் கிளை அங்கத்தவர் சபையின் வருடாந்தக் கூட்ட-த்தில் கிளை அங்கத்தவர் சபையால் தெரிவு செய்யப்படுவர். இருவர் கிளை ஷூராவின் ஆலோசனையுடன் கிளை நாஸி மினால் நியமனம் செய்யப்படுவர்.*

## அத்தியாயம்– 5

## நிதி

*105.* *ஜமாஅத்தின் நிதி, மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் பொறுப்பிலி ருக்கும். ஜமாஅத்தின் நிதிக் கொள்கை, நிதி ஒழுங்குகள் மற்றும் வருடாந்த, இடைக்கால வரவு-செலவுத் திட்டங்கள் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் அங்கீகாரத்துடனேயே அமுலுக்கு வரும்.*

*106.* *ஜமாஅத்தின் நிதி பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்.*

*அ)* *அங்கத்தவர் சந்தா.*

*ஆ)* *அங்கத்தவர்களும் நலன்விரும்பிகளும் அளிக்கும் நன்கொடைகள்.*

*இ)* *ஜமாஅத்துக்குச் சொந்தமான அசையும், அசையா ஆதனங் களும் அதன் மூலம் கிடைக்கும் வருமானங்களும்.*

ஈ) ஸகாத் நிதி.

உ) அமீரின் அல்லது மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் அனுமதியுடன் இஸ்லாத்திற்கும் நாட்டு சட்டத்திற்கும் முரணாகாத வகையில் ஈட்டப்படுவனவும் திரட்டப்படுவனவும்.

**107.** ஜமாஅத்தின் நிதி நிர்வாகத்துக்கு ஜமாஅத்தின் நிதிச் செயலாளர் பொறுப்பாக இருப்பார். அவர் அமீரினதும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவினதும் வழிகாட்டலுடன் செயற்படுபவராகவும் அவர்களுக்கு வகை கூறுபவராகவும் இருப்பார்.

**108.** ஜமாஅத்தின் வருடாந்த, இடைக்கால வரவு-செலவுத் திட்டங்கள் நிதிச் செயலாளரினால் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

**109.** இந்த யாப்பின் நோக்கங்கள், இலட்சியங்களை அடைந்து கொள்வதற்கு அசையும், அசையா சொத்துக்களை உரித்தாக்கிக் கொள்வதற்கும் உடமையாக்கிக் கொள்வதற்கும் கைமாற்றுவதற்கும் மற்றும் வங்கிக் கணக்குகளை வைத்திருப்பதற்கும் முதலீடுகளை மேற்கொள்வதற்கும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவுக்கு அதிகாரம் உண்டு.

**110.** வருடாந்த நிதியறிக்கை மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அமர்வொன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.

**111.** அல்மஜ்லிஸினால் நியமிக்கப்படும் அங்கீகாரம் பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் ஜமாஅத்தின் நிதியறிக்கை கணக்காய்வு செய்யப்படும்.

**112.** அல் மஜ்லிஸ் தமது அங்கத்தவர்களிலிருந்து ஒன்பது பேரைக் கொண்ட ஒரு கணக்காய்வு குழுவை நியமிக்கும். இக்குழு கணக்காய்வாளரால் வழங்கப்படும் வருடாந்த அறிக்கையை பரிசீலித்து தனது அறிக்கையை அல்மஜ்லிஸுக்கு சமர்ப்பிக்கும். இவ்வறிக்கை அல்மஜ்லிஸால் அங்கீகரிக்கப்படுமிடத்து அது முறையான நிதி அறிக்கையாகக் கொள்ளப்படும்.

இக்கணக்காய்வுக் குழுவில் மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா உறுப்பினர்களின் அங்கத்துவம் மூன்றைத் தாண்டக்கூடாது

## அத்தியாயம்– 6
## பெண்கள் அணி

*113.* *ஜமாஅத் ஒரு பெண்கள் அணியைக் கொண்டிருக்கும். அதன் நிருவாகத்தைச் சீராக நடத்துவதற்கு **151** அங்கத்தவர்களைக் கொண்ட பெண்கள் அணி அல்மஜ்லிஸும் **21** அங்கத்தவர்களைக் கொண்ட தேசியக் குழுவும் இருக்கும். அதனை திட்டமிட்டு வழிநடத்த ஒரு தேசிய அமைப்பாளரும் இருப்பார்.*

## அத்தியாயம்– 7
## பொது விடயங்கள்

### யாப்புத் திருத்தங்களும் மாற்றங்களும்

*114.* *அல்மஜ்லிஸுக்கு சமுகமளித்தவர்களில் **2/3** பகுதியினரின் அங்கீகாரத்துடன் இந்த யாப்பின் உறுப்புரைகளில் திருத்-தங்கள் செய்யவோ புதிய உறுப்புரைகளை சேர்க்கவோ இந்த யாப்பை புதியதொரு யாப்பின் மூலம் மாற்றீடு செய்யவோ முடியும்.*

*115.* *யாப்புத் திருத்தப் பிரேரணைகள் அல்மஜ்லிஸ் அங்கத்தவர்களால் எழுத்து மூலம் பொதுச் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.*

*116.* *மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அவசரம் எனக் கருதும் பிரேரணைகள் அடுத்து வரும் அல்மஜ்லிஸ் கூட்டம் அல்லது இந்நோக்கத்துக்காகக் கூட்டப்படும் விசேட அல்மஜ்லிஸ் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.*

*117.* *ஏனைய முன்மொழிவுகள் அவை கிடைக்கப்பெற்று ஒரு வருடத்துக்குள் நடைபெறும் அல்மஜ்லிஸ் கூட்டம் ஒன்றில் அல்லது அதற்கெனக் கூட்டப்படும் விஷேட கூட்டத்தில் பொதுச் செயலாளரால் சமர்ப்பிக்கப்படும்.*

*118.* *இத்தகைய எல்லாப் பிரேரணைகளும் அவை சமர்ப்பிக்கப்படும் கூட்டம் நடைபெற ஒரு வாரத்துக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அல்மஜ்லிஸ் அங்கத்தவர்களுக்கு அனுப்பப்படும்.*

**கோரம்**

*119.* *ஜமாஅத்தின் எல்லாக் கூட்டங்களுக்குமான கோரம் 51 வீதம் ஆகும்.*

*120.* *ஒரு கூட்டத்தில் கோரம் காணப்படாதவிடத்து கூட்டம் ஒத்திவைக்கப்படும். அதனை அடுத்து கூட்டப்படும் கூட்டத்தில் கோரம் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.*

**தீர்மானம் எடுத்தல்**

*121.* *ஜமாஅத்தின் தீர்மானங்கள் அடிப்படையில் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா என்பவற்றின் வழிகாட்டலுக்கு ஏற்பவே அமையும். தீர்மானங்கள் முடிந்தவரை கருத்துடன்பாட்டின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும். இருப்பினும், உடன்பாடு எட்டப்படாத சந்தர்ப்பங்களில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, யாப்பில் வேறு வகையில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தால் அன்றி, சாதாரண பெரும்பான்மை மூலம் முடிவுகள் எட்டப்படும். இத்தகைய வாக்கெடுப்பு ஒன்றில் சபை சமமாகப் பிரியுமிடத்து அமீர் அவர்களின் வாக்கு தீர்மானிக்கும் வாக்காகக் கருதப்படும்.*

**உப விதிகள்**

*122.* *இந்த யாப்பில் ஏற்பாடுகள் இல்லாத விடயங்களிலும் யாப்பிலுள்ள விடயங்களுக்கு விளக்கம் தேவைப்படும் விடயங்களிலும் உப விதிகளை உருவாக்கி அமுலாக்கவும் அவற்றை மாற்றவும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவுக்கு அதிகாரம் உண்டு.*

**பதவிக் காலம்**

*123.* *அமீர் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பதவிகளுக்கும் குழுக்களுக்கும் சபைகளுக்குமான பதவிக் காலம் பொதுவாக இரு வருடங்களாகும். எவ்வாறாயினும், அமீர் மற்றும் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவினால் நியமிக்கப்படும் அனைத்துப் பதவிகளும் குழுக்களும் சபைகளும் புதியதொரு மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா பதவி ஏற்பதோடு வறிதாகும். எவ்வாறாயினும், அமீர் அவர்களின் ஒரு பிரகடனம் மூலம் அவற்றுக்கான அடுத்த நியமனம் நடைபெறும் வரை அவற்றை செல்லுபடியான தாக்கலாம்.*

### பதவியினர் பைஅத் (சத்தியப் பிரமாணம்)

*124. ஜமாஅத்தின் அமீர், மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அங்கத்தவர் தவிர்ந்த ஏனைய பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் அநுபந்தம் 05ல் உள்ளவாறு அமீர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தல் வேண்டும்.*

*125. எந்தப் பதவியினரும் அந்தப் பதவிக்கான சத்தியப் பிரமாணம் செய்த பின்னரே பதவியேற்றதாகக் கொள்ளப்படும்.*

### தேர்தல்கள்

*126. ஜமாஅத்தினுள் தேர்தல் விடயங்களை முன்னெடுக்க ஒரு செயலகம் இருக்கும். அதன் பொறுப்பாளராக பிரதான தேர்தல் அதிகாரி ஒருவர் இருப்பார். இவர் அல்மஜ்லிஸால் நியமிக்கப்படுவார்.*

*127. ஜமாஅத்தின் எந்தவொரு தேர்தலிலும் தேர்தல் பிரசாரம் அனுமதிக்கப்பட மாட்டாது.*

*128. முன்தஸிப் அங்கத்தவர்களின் தொகை 200 ஐத் தாண்டும் பிராந்தியங்களை மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அல்மஜ்லிஸ் தேர்தலுக்காக 200 அங்கத்தவர்களுக்கு மேற்படாத தேர்தல் வலயங்களாகப் பிரிக்கும்.*

### இணை அமைப்புக்கள்

*129. இந்த யாப்பின் ஏற்பாடுகளுக்கு முரண்படாத வகையில் செயலாற்றும் சங்கங்கள், அமைப்புக்கள், நிறுவனங்கள் ஜமாஅத்தின் இணை அமைப்புகளாகச் செயற்பட விண்ணப்பித்தால், மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா அவற்றைப் பரிசீலித்து தகுதியெனக் காணுமிடத்து அவற்றை ஜமாஅத்தின் இணை அமைப்புகளாக அங்கீகரிக்கும்.*

*130. அத்தகைய இணை அமைப்புக்களின் நடவடிக்கைகளுக்கு ஜமாஅத் வகைகூற மாட்டாது.*

### யாப்பு விவகாரக்குழு

*131. ஜமாஅத்தில் ஒரு யாப்பு விவகாரக்குழு இருக்கும். இக்குழுவினை மத்திய மஜ்லிஸுஷ் ஷூரா நியமிக்கும். யாப்பின் உறுப்புரைகளுக்கு விளக்கமளிக்கும் அதிகாரம் இந்த யாப்பு விவகாரக் குழுவுக்கே உரியதாகும். அதன் முடிவுகள் இறுதியானதாகும்.*

## நீதி

*132. ஜமாஅத்தில் மத்திய மஜ்லிஸுஷ் ஷூராவினால் நியமிக் கப்படும் ஒரு நீதிக் குழு இருக்கும். அது ஜமாஅத்திற்குள் நிருவாக ரீதியாக வரும் முறைப்பாடுகளை விசாரணை செய்து அமீருக்கு பரிந்துரைகளை வழங்கும்.*

## நிருவாக ஆண்டு

*133. ஜமாஅத்தின் நிருவாக ஆண்டு என்பது ஹிஜ்ரி ஆண்டின் முஹர்ரம் முதல் துல்ஹஜ் வரையிலான 12 மாதங்களாகும்.*

## மாறுநிலை ஏற்பாடுகள்

*134. இந்த யாப்பின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் யாப்பு அமுலுக்கு வரும் திகதிக்கு முன்னர் நடைமுறையிலிருந்த பதவியினர், குழுக்கள், சபைகள் அவற்றின் தவணை முடியும் வரை பதவியிலிருக்கும்.*

## கடமைகளைப் பகிர்ந்தளித்தல்

*135. யாப்பின் ஏற்பாடுகளுக்கு இயைபாக நியமிக்கப்பட்ட பதவிகளை வகிப்பவர்கள், அமைக்கப்பட்ட சபைகள், நிறுவனங்கள், அலகுகள் ஜமாஅத்தின் கொள்கை, இலட்சியம், செயன்முறைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அதிகாரங்களையும் கடமைகளையும் ஜமாத் பகிர்ந்தளிக்கலாம். அவ்வாறு பகிர்ந்தளிக்கப்படும் நபரோ, சபையோ நிறைவேற்றும் விடயங்கள் உரிய முறையில் ஜமா அத்தினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும்.*

## யாப்பின் உரைகளுக்கிடையிலான முரண்பாடு

*136. இந்த யாப்பின் வெவ்வேறு மொழியிலான உரைகளுக் கிடையில் முரண்பாடு காணப்படுமிடத்து தமிழ் மொழி உரையே மேலோங்கும்.*

## அமுலுக்கு வரும் திகதி

*137. இந்த யாப்பு 2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும்.*

*இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி*
*யாப்பு*
*அநுபந்தம் 01*

**அங்கத்தவர் "பைஅத்"**

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيم

**أشهد أن لا إله إلا الله وحده لا شريك له وأشهد أن محمداً عبده ورسوله**

வணங்கி வழிபடத் தகுந்தவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூ தருமாவார் என சாட்சியம் கூறுகின்றேன்.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் முன்தஸிப் அங்கத்தவராக இணைந்து கொள்ளும்........................................................................ (பெயர்) ஆகிய நான்,

அ) எனது அங்கத்துவம் காரணமாக என்மீது சுமத்தப்படும் கடமைகளை அல்லாஹ்வுக்காகப் பூரணமாக நிறைவேற்ற முயற்சிப்பேன் என்றும்,

ஆ) எனது அங்கத்துவத் தகைமைகளில் குறை ஏற்பட்டால் அல்லது எனது கடமைகளில் நான் தவறினால் அதற்காக ஜமாஅத் என்னைப் பற்றி எடுக்கும் தீர்மானங்களை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வேன் என்றும்,

இ) யாப்பின் ஏற்பாடுகளை மதித்து ஜமாஅத் எடுக்கும் தீர்மானங்களுக்கு ஏற்ப செயற்படுவேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

என்னைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்கும், 'இகாமதுத் தீன்' பணியில் அல்லாஹ்வுக்காக உளத்தூய்மையோடு நான் உழைப்பதற்கும் எனக்கு அருள் புரிய வேண்டுமென்று எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்தித்து, அவனிடமே 'தவக்குல்' வைத்தவனாக இதில் கையொப்பமிடுகிறேன்.

திகதி: ................................................ கையொப்பம்: ................................................

விலாசம்: ..........................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி
யாப்பு
அநுபந்தம் 02

## அமீர் 'பைஅத்'

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيم

أشهد أن لا إله إلا الله وحده لا شريك له وأشهد أن محمداً عبده ورسوله

வணங்கி வழிபடத் தகுந்தவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூ தருமாவார் என சாட்சியம் கூறுகின்றேன்.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் 'அமீர்' ஆகப் பதவி ஏற்கும் ................................... ........................................................................ ஆகிய நான், எனது ஒவ்வொரு செயலுக்கும் எஜமானனான அல்லாஹ்விடத்தில் பதில் சொல்ல வேண்டுமென்ற உணர்வோடும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடும் அல் குர்ஆனினதும் ஸுன்னாவினதும் வழிகாட்டலுக்கு ஏற்ப எல்லாக் காரியங்களையும் செய்ய முயற்சிப்பேன் என்றும் ஜமாஅத்தின் யாப்பினையும் தீர்மானங்களையும் பேணி இந்த அமைப்பை வழிநடாத்துவேன் என்றும் இதயசுத்தியோடும் பொறுப்புணர்ச்சி யோடும் வாக்குறுதியளிக்கின்றேன், இன்ஷா *அல்லாஹ்*.

பெயர் : ....................................................................................................

முகவரி : ....................................................................................................

திகதி : ...................................................................

கையொப்பம்: ................................................

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி
யாப்பு
அநுபந்தம் 03

**அமீருக்கு அங்கத்தவர் பைஅத்**

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيم

**أشهد أن لا إله إلا الله وحده لا شريك له وأشهد أن محمداً عبده ورسوله**

வணங்கி வழிபடத் தகுந்தவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூ தருமாவார் என சாட்சியம் கூறுகின்றேன்.

........................................................................................ ஆகிய தங்களை / அவர்களை இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் அமீராக, மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளும் நான், இஸ்லாமியக் கட்டளைகளுக்கு மாற்றமில்லாத வகையில் தங்களால்/அவர்களால் இடப்படும் எல்லாக் கட்டளை

களுக்கும் கட்டுப்பட்டு நடக்கச் சம்மதிக்கின்றேன், என இத்தால் வாக்குறுதியளிக் கின்றேன்.

| இல | பெயர் | பிராந்தியம் | ஒப்பம் | திகதி |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

*இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி*
*யாப்பு*
*அநுபந்தம் 04*

## மத்திய மஜ்லிஸுஷ் ஷுரா உறுப்பினர் 'பைஅத்'

أشهد أن لا إله إلا الله وأشهد أن محمداً عبده ورسوله

வணங்கி வழிபடத் தகுந்தவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூ தருமாவார் என சாட்சியம் கூறுகின்றேன்.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் மத்திய மஜ்லிஸுஷ் ஷுரா உறுப்பினராக பதவியேற்கும் ........................................................................ ஆகிய நான், அல்லாஹ்வின் அன்பைப் பெற வேண்டும் என்ற ஆர்வத்தில், அவனது கோபத்தை விட்டும் விலக வேண்டும் என்ற உறுதியோடு எனது அபிப்பிராயங்களைத் தெரிவிப்பேன் என்றும், கடமைகளைச் செய்வேன் என்றும், பிறருக்கு முன்மாதிரியான இஸ்லாமிய வாழ்வைப் பேணி நடக்க முயற்சிப்பேன் என்றும் உறுதியளிக்கின்றேன், இன்ஷா அல்லாஹ்.

திகதி: ..............................................

கையொப்பம்: ..............................................

..............................................................................................................................................விலாசம்:

..................................................................................................................................................................

*இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி*
*யாப்பு*
*அநுபந்தம் 05*

**பதவியினர் “பைஅத்”**

بِسْمِ اللهِ الرَّحْمَنِ الرَّحِيم

**أشهد أن لا إله إلا الله وحده لا شريك له وأشهد أن محمداً عبده ورسوله**

வணங்கி வழிபடத் தகுந்தவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார் என சாட்சியம் கூறுகின்றேன்.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் ........................................................(பதவி) ஆக பதவியேற்கும் ...................................................................(பெயர்) ஆகிய நான், ஜமாஅத் யாப்புப்படி என்மீது சுமத்தப்படும் பொறுப்புக்களை, எனது எஜமானனான அல்லாஹ்விடத்தில் பதில் சொல்ல வேண்டுமென்ற உணர்வோடும், அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடும் நிறைவேற்ற முயற்சிப்பேன் என்றும் இதய சுத்தியோடும் பொறுப்புணர்ச்சியோடும் வாக்குறுதியளிக்கின்றேன். இன்ஷா அல்லாஹ். இதில் நான் தவறிழைத்தால் அல்லது கவனயீனமாக நடந்து கொண்டால், அந்நிலையில் என்னைப் பற்றி ஜமாஅத் எடுக்கும் தீர்மானங்களை ஏற்றுக் கொள்வேன் என்றும் ஒப்புக்கொண்டு இதன் கீழ் கையொப்பமிடுகிறேன்.

திகதி: ..................................................

கையொப்பம்: ..................................................

........................................................................................................................................................விலாசம்:

........................................................................................................................................................

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு 00900
Tel: +94 112 68 7091 | Fax: +94 112 68 6030